## விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2016

---------------------------------------------------------------

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1996 பெப்ரவரி 09 ஆம் திகதிய 909/13 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட 1996 இன் 01 ஆம் இலக்க விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டியின் 21 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு, என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று 2017 செப்தெம்பர் 28 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

அரச மூலதன உதவி கணக்கிடுவதற்காக நிறுவனத்தால் கொள்கைகள் இனங்கண்டிருக்கவில்லாததுடன், கடந்த பல ஆண்டுகளாக கிடைக்க பெற்றிருந்த 2016 திசெம்பர் 31 திகதிக்கு கூட்டுத்தொகை ரூபா 161,109,893 ஆன அரச மூலதன உதவி உரிமையின் கிழ் காட்டப்பட்டது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது நிறவனத்திற்கு திறைசேரியினால் மற்றும் தேசிய விஞ்ஞான அடிப்படையினால் மூலதன உதவியாக கிடைத்த ரூபா 43,000,000 ஆன தொகையை ரூபா 15,000,000 ஆக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டினுள் ரூபா 28,000,000 தொகையான நிலையான வைப்பு மீள் பெறல் நிதி வெளிப் பாய்ச்சலாகவும் முதலீடு செய்யப்பட்ட ரூபா 19,683,278 தொகை, நிதி உற்பாய்ச்சலாகவும் காசுப்பாய்சலின் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) நிதி நிலைமை கூற்றுக்களின் பிரகாரம் நடைமுரை சொத்துக்களினுள் உள்ள ஏனைய சொத்துக்களின் அதிகரிப்பு ரூபா 27,271,367 நிதி வெளிப் பாய்ச்சலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டுவதற்கு பதிலாக ரூபா 274,044 நிதி உற்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிதி கூற்றுக்களில் காட்டப்பட்ட செம்மை கணக்கின் ரூபா 1,276,498 ஆன செலவு மீதி காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் இலாபத்தால் கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) அரச வங்கியொன்றில் '' பீ அமரசிங்ஹ புழமை நிதியம்'' ஆன பெயரில் 2016 செப்தம்பர் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த சேமிப்பு கணக்கில் உள்ள ரூபா 604,708 ஆன மீதி மற்றும் 2013 திசெம்பர் 09 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையான வைப்பின் 2016 திசெம்பர் 31 இல் உள்ள ரூபா 428,651 ஆன மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 80,141,656 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணத்தால் கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

| | விடயங்கள் | பெறுமதி | சுமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட இரசாயன பொருட்களும் ஆராய்ச்சி உபகரணங்களும் | 3,121,993 | இருப்பு புத்தகங்கள் மற்றும் பொருட்பதிவேடு |
| (ஆ) | புவியியல் தகவல் தொகுதி (GIS) 09 குறுகிய பாடநெறிகள். | 2,356,138 | பாடநெறிகள் நடாத்தப்பட்டதற்கான தகவல்கள் |
| (இ) | நிலையான வைப்புகளை இரத்துச்செய்து தவறான முறையில் பணத்தை பெற்றுக்கொண்டதனால் இழக்கப்பட்ட வட்டி உள்ளடங்கலாக நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பு. | 74,663,525 | 2008 ஆண்டு முதல் 2016 வரை குறித்த மொத்த இழப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருந்த செம்மையாக்கல்கள் தொடர்பான விபரம். |
| | | 80,141,656 | |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 135 | உள்ளகச் செவ்வை ஒன்றாகும் விதத்தில் நிதி செயற்பா:களுக்காக கட்டுப்பாட்டு முறைமையொன்று ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும், விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பெயரில் உள்ள எல்லா நிலையான வைப்பு சான்றிதல்கள் பொறுப்பில் நிலவுதல், அச்சான்றிதல்களை புதுப்பித்தல், பணமாக்குதல் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை தயாரித்தல் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளும் நிதிபிரமாணங்களுக்கு இணங்காது 2006 ஆண்டு முதல் 2016 வரை ஒரே அலுவலருக்கு பொறுப்புச்சாட்டப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 371 திருத்தப்படல் எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட இலக்கம் 3/2015 மற்றும் 2015 ஜூலை 14 திகதிய அரச நிதி சுற்றறிக்கை. | - 07 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 எல்லையை மீறி ரூபா 114,000 முதல் ரூபா 176,800 வரை வீச்சலவினுல் முற்பணம் வழங்கப்பட்டிருந்தன.<br><br>- 13 சந்தர்ப்பங்களில் தேவையான அளவை விட 12 சதவீதம் முதல் 78 சதவீதம் வரை அளவான பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், அம் மேலதிக பணம் 7 முதல் 77 தினம் வரையான தாமதத்துடன் தீர்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 757 (2)(ஆ) | 2016 ஆம் ஆண்டு தொடர்பான வருடாந்த பண்டக கணிப்பீடு செய்வதற்காக கணிப்பீடுச் சபை நியமிக்கப்பட்ட போதும் உள்ளக கணிப்பீடு முடிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் II பகுதி | |
| | II பகுதியின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 இன் (ii) மற்றும் (iii) ஆம் பிரிவுகள். | தமது கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய சேவைகளிலிருந்து உழைக்கும் கட்டணங்களிலிருந்து 10 சதவீதம் தமக்கு உரிய உயர்கல்வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய போதிலும், விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தினால் 2016 ஆண்டினுள் வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 11,058,565 ஆன விரிவுரை கட்டணங்களிலிருந்து 10 சதவீத பங்கான ரூபா 1,105,856 ஆன கட்டணம் நிறுவாக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 ஜுன் 2 திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பிரிவு | திறைசேரியின் அனுமதியின்றி அரச நிறுவனங்களில் மேலதிக பணம் முதலீடு செய்ய முடியாத போதும், அதற்கு மாற்றமாக் நிர்வாக சபையின் அனுமதியுடன் நிறுவனத்தினால் ரூபா 89,174,895 ஆன நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 17,917,356 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 26,173,802 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,256,446 குறைவொன்று அவதானிக்கப்பட்டன. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பாடநெறி கட்டண வருமானம் ரூபா 6,083,334 ஆல் அதிகரித்த போதிலும், ஊழியர் ஊதியம் ரூபா 10,374,501 ஆல் அதிகரித்தமை மேற்படி குறைவுக்கு பிரதான காரணங்களாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையிலும் நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை செம்மையாக்கியதன் பின் 2012 ஆம் ஆண்டின் ரூபா 45,894,445 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 85,828,243 ஆக இருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

1996 இன் 01 இலக்க விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் அடிப்படை நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- பட்டப்பின் கல்வியினை வழங்கும் சிறந்த நிறுவனமொன்றாக்குதல்.
- அடிப்படை மற்றும் கூட்டிணைந்த விஞ்ஞானம் சார் ஆராய்ச்சிகளுக்கான சிறந்த நிறுவனமொன்றினை உருவாக்குதல்.
- சமூகத்திற்கு விஞ்ஞானம் சார்ந்த தகவல்களை விரிவுபடுத்தல்.
- உயர் நிதி மற்றும் நிர்வாகம் என்பவற்றை செயற்திறனாக இயக்கி சிறந்த பட்டப்பின் படிப்பு நிறுவனமொன்றாக்குதல்.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் உலக பல்கலைக்கழக தரப்படுத்தலின் படி 2016 ஆம் ஆண்டின் 14,000 ஆவது இடத்தை எட்டுவதற்கு இலக்கு வைக்கப்பட்ட போதும் 17,314 ஆவது இடம் கிடைக்கப்பெற்றுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டில் 4 புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்த இலக்கு வைக்கப்பட்ட போதும் ஆண்டினுள் 2 புதிய பாடநெறிகள் மாத்திரமே செயற்படும் நிலைமைக்கு கொண்டுவரப்பட்டிந்தன.

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

ஆராய்ச்சி நடவடிக்கைக்காக 07 நிறுவனங்களால் கடந்த வருடங்களில் கிடைத்திருந்த ரூபா 2,696,003 ஆன நிதியங்கள் உரிய ஆராய்ச்சி நடவடிக்கைக்காக ஈடுபடுத்துவதற்கு அல்லது உரிய நிறுவனங்களுக்கு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேவைகளை இனங்கானாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 362,884 பெறுமதியான 67 இருப்பு வகைகள் ஓராண்டை விஞ்சிய காலம் பாவினைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேராதனை பல்கலைக்கழகத்தினால் நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 324,220 பெறுமதியான இரசாயன பொருட்கள், நிறுவகத்தின் இருப்புப்புத்தகங்களில் பதியப்படாமல் நேரடியாக இரசாயன கூடத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

## 4.4 நிதிக் குறைப் பயன்பாடு

மீளாய்வாண்டினுல் சொத்துக்கள் சுவீகரித்திலின் கீழ் புத்தகங்கள் மற்றும் வார இதழ் கொள்வனவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 ஆன தொகையால் ரூபா 948,305 அதாவது 95 சதவீதமான அளவு உபயோகித்திருக்கவில்லை.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் V ஆம் அத்தியாயத்தின் 47 ஆம் பிரிவிற்கு முரணாக ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பு மற்றும் பணிக்கொடை கணிப்பீட்டிற்கு கற்கைப் படிகள் கருத்திற் கொண்டு கணிப்பிடப்பட்டதன் காரணமாக கல்விசார் பதவியணியினருக்காக நிறுவனத்தின் பங்களிப்பாக ரூபா 421,231 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

நிறுவகத்தின் பதவியணியின் 09 பதவிகளுக்காக இரண்டு நிரந்தர பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் போன்று கல்விசார்பட்ட பதவியணியினரில் 7 பேர் உள்ளடங்களாக 11 வெற்றிடங்கள் நிலவியதன் காரணமாக நிறுவகத்தின் கல்வி மற்றும் நிறுவக நடவடிக்கைகளை சிறந்த வகையில் நிறைவேற்றப்படுவதற்கு தடையொன்றாக இருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2007 ஒக்தோபர் 02 ஆம் திகதிய பீஈடீ/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கு சமர்ப்பிப்பதன் முகாமைத்துவத்தின் பொறுப்பு மீதான சான்றிதழ் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைமத்துவக் குழுவின் அனுமதி பெற்ற நாளாதுவரையான கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்று ஒவ்வொரு வருடமும் ஆரம்பிப்பதற்கு குறைந்தபட்சம் 15 நாற்களுக்கு முன்பு கணக்காய்வாளர், திறைசேரி, நேர் அமைச்சுகள் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009(I) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு பிரிவும் தங்களது நிறுவகத்திற்காக இலக்கிடப்பட்ட திகதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் கணக்காய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 கணக்காய்வுக் குழு**

2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009(I) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம், குறைந்தபட்சம் 03 மாதத்திற்கு ஒரு முறையாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் மீளாய்வாண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்றுகூடல் 03 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானங்களையும் செலவினங்களையும் உள்ளபடியான வருமானங்களுடனும் செலவினங்களுடனும் ஒப்பீடு செய்தபோது 23 விடயங்களில் 23 சதவீதம் முதல் 103 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படாமை. |
| (ஆ) | நிதிய உபயோகம் | ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் உபயோகிக்கப்படாமை. |
| (இ) | இருப்பு மற்றும் பொருளிருப்புக் கட்டுப்பாடு | போதியளவான கட்டுப்பாட்டு முறைகள் உருவாக்கி நடாத்தப்படாமை. |
| (ஈ) | நிதி முகாமை | (i) போதியளவு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் நிறுவப்படாமை காரணமாக நிறுவனத்தின் நிலையான வைப்புகள் தவறான முறையில் இரத்துச்செய்யப்பட்டு பணம் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்படல். |
| | | (ii) நிறுவனத்தின் பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்கையில் மற்றும் நிலையான வைப்பு பணம் மீழ் பெறப்படுகையில் அவ்வப்போது நிறுவாக சபையின் அனுமதி பெறப்படாமை. |
| | | (iii) நிறுவகத்தின் நிதி நிலைமைகள் முகாமை சபைக்கு அறிக்கையிடப்படாமை. |
| | | (iv) சட்டங்கள் விதிகளுக்கு முரணாக நிதியம் முதலீடு செய்தல். |